**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 4124/ஆ5/2023, நாள்.03.10.2023**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – தமிழியக்கம் மற்றும் விஜடி போபால் பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி – அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 8, 9 மற்றும் 10ம் வகுப்புகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி 11.10.2023 (புதன்கிழமை) நடைபெறுதல் – மாணவ / மாணவியர்கள் கலந்துக் கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை Letter from the Vice President, VIT Dated. 03.10.2023

•••••

பார்வையில் காணும் கடிதத்தில், தமிழியக்கம் மற்றும் விஜடி போபால் பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியானது 11.10.2023 (புதன்கிழமை) அன்று காலை 9.30 மணி அளவில் காட்பாடி, வி.ஐ.டி பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 8, 9 மற்றும் 10ம் வகுப்புகளில் பயிலும் மாணவ / மாணவியர்கள் கலந்துக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஒரு பள்ளிக்கு ஒரு மாணாக்கர் என கலந்துக்கொள்ள வேண்டும். போட்டிக்கான விதிமுறைகள் மற்றும் திருக்குறள் ஒப்புவித்தலுக்கான அதிகாரங்கள் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. பள்ளி தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளியில் 8, 9 மற்றும் 10ம் வகுப்புகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு தகவல் தெரிவித்து சிறந்த மாணவர் ஒருவரை தேர்ந்தெடுத்து போட்டியில் கலந்துக்கொள்ள செய்ய வேண்டும். மேலும், தேர்வு செய்யப்பட்ட மாணவரின் விவரங்களை கீழ்காணுயம் G–form ல் பதிவு செய்ய வேண்டும்.

https://forms.gle/5EYE9ejkgUQNdKj98

எனவே, மேற்காண் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியில் மாணவர்கள் கலந்துக் கொள்வதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மேலும் தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் 11.10.2023 (புதன்கிழமை) அன்று காட்பாடி, வி.ஐ.டி பல்கலைக்கழகத்தில் நடைபெறும் போட்டியில் கலந்துக் கொள்ள ஏதுவாக ஒரு பொறுப்பாசிரியருடம் அனுப்பிவைக்க தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – போட்டியின் விதிமுறைகள்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்,
அரசு / அரசு நிதியுதிவி பெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல் –
1. மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலைக் கல்வி)
2. மாவட்டக் கல்வி அலுவலர் ( தொடக்கக் கல்வி)
(தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நடுநிலைப் பள்ளிகளுக்கு மேற்காண் விவரம் தெரிவிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. )
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)